# 17. பராபரம்.

### *அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பூ**மிசை யஃறிணை யாதனைப் போற்புரி யாதுயர் நோக்கமுடை
மாமனு வாய்வகுத் துள்ளநற் காத்திரம் வெளவியு மெந்நெறிக்கும்
ஓமெனுஞ் சைவசித் தாந்தசன் மார்க்கமுற் றுன்னினை வேபோந்தும்
ஏமுற லின்றெனி னென்னுறழ் தோஷிமற் றேவர் பராபரமே. 1

**நி**ன்பரி வானுனக் கஞ்சு விவேகமென் னெஞ்சி லமர்ந்தமுதன்
மன்பதை பல்வகை யாக விறைஞ்சுதெய் வங்க ளெலாமுதலாம்
உன்பரி பூரணத் துள்ளவென் றேயுனை யுள்கெளி யேனையிந்நாள்
அன்பொடு நீயளி யாவிடி னார்துணை யாவர் பராபரமே. 2

**பா**ரி மகாருற வாகர மாதிய பந்தமெல் லாமுயிர்த்துன்
பேரரு ளேதுணை யென்று திரிந்திடு பெற்றி யுளேனையணைத்
தோரரு ணீபுரி கில்லை யெனிற்புரி வோடெ னுளங்கருதி
ஆரரு ணல்குவ ரார்துணை யாகுவ ரைய பராபரமே. 3

---

10. **இப்படி** = இப்பூமி. **மிறை** = குற்றம்.

3. **அகரம்** = ‘ஆகரம்’ என நீட்டல்விகாரம். அகரம் = ஊர்.

**தூ**ங்கி விழித்திட லொத்த வுலப்பொடு தோற்றர வுக்கெளியேன்
நீங்கி நிரந்தர முன்னொடு தோய்ந்துய நித்த முனைக்கருதென்
பாங்குணர் வாரெவர் பண்டை வினைக்கடை பைதலி னின்றுமெனைத்
தாங்குந ராருனை யன்றி யருட்பிர சாத பராபரமே. 4

**ஒ**ன்று மறிந்தில னுக்குமெல் லாமறிந் தோற்கு மனந்தையுழை
நன்றிது தீதிது வென்றுணர் தன்மமெஞ் ஞான்றுமின் றுன்னடியான்
என்றுனு நானிடை யாதலி னுன்னரு ளின்றியெவ் வண்ணமுய்வேன்
அன்றறை தந்தவ ணம்புரி யென்னறி வாய பராபரமே. 5

**நீ**யெனை யாண்முறை யாயளி காட்டியென் னெஞ்சையு முன்வயமாய்
ஈய வலித்திது காறு மனேகவெல் லென்னை மறந்ததனால்
தூயவ னலனிவன் றீயவ னென்றுது றந்தனை யோவெனவிங்
கேயக நைந்துக லங்குகின் றேன்புக லேது பராபரமே. 6

**இ**ப்படி மற்றுரு வப்பொருள் கட்கெலா மெப்படி யாதரவோ
அப்படி யெப்பொரு ளுக்குநி யாதர வாமதி லின்புதரா
முப்புடி விட்டருள் பெற்றணை வார்க்கெலா முக்கிய வாதரவாய்
எப்பொழு துங்கிளர் நீயெனை நீங்குவ தென்னை பராபரமே. 7

**இ**த்தரு ணத்தெனை யாண்டருள் செய்கிலை யேன்மன மிக்குலைவாய்
எத்துணை யுஞ்சுக மின்றி யழுங்கிட லெய்துவ தோடெனையே
ஒத்தவ ரும்பினி டும்படி யாமைய வோகை சிறந்தருளாம்
மத்தமு றும்படி செய்சிவ சுப்பிரமணிய பராபரமே. 8

**கே**ட்டனி னைத்த றெளிந்திட லென்பன கீணமின் ஞானமதை
ஈட்டிடு மார்க்கமன் னாகு மலாலுதிப் பென்ப தகற்றிடுமோ
தாட்டிக நிட்டையி னால தகன்றிடல் சத்திய மாதலினால்
வாட்டமி லந்நிலை தன்னில்வை சுப்பிர மணிய பராபரமே. 9

**நி**ட்டை நிமித்தம தாகமு னுற்றவென் னீர்மையெல் லாநழுவ
நட்ட நடுத்தக ராலய மானதி னாட்ட மிடும்படிநீ
இட்ட வணம்பணி நானுய்ய நல்லரு ளென்பதை யீதியருள்
வட்டை விளக்கு புகழ்க்கவி நன்னிரு வாண பராபரமே. 10

7. **இப்படி** = இப்பூமி. ‘நீ’ நி - எனக் குறுகிற்று.

9. **தாட்டிகம்** - ‘தாஷ்டீகம்’ என்னும் வடமொழியின் விகாரம்.

10. **வட்டை** = வழி; **சூ - நிகண்டு.**